மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : நான் அதைத் தான் குறிப்பிட்டேன். அதற்காக சட்டம் இயற்றுகின்ற செயற்குறிப்பு தான் இருக்கிறது, கால்நடை இலாகாவிலே அது குறித்து எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாயகம் திரும்புவோருக்கு வேலை வாய்ப்பு, கடன் வசதிகள்.

*வினா எண். 38— திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாயகம் திரும்பிய அகதிகளுக்கு அவர்கள் விரும்பும் இடத்தில் வேலை வாய்ப்பு, கடன் வசதி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தாயகம் திரும்பும் இலங்கைத் தமிழர்கட்கு, அவர்களது குடும்ப அட்டையில், கண்டி உதவி உயர்மட்ட ஆணையாளரால் எந்த உதவிக்கு, குறிப்பிட்டு அனுப்பப்படுகிறார்களோ அந்த உதவி, தாயகம் திரும்பி வந்தவுடன் அளிக்கப்படுகிறது. இதேபோலத்தான் பர்மாவிலிருந்தும், வியட்நாமிலிருந்தும் தாயகம் திரும்பி வருபவர்கட்கும் அவரவர்கள் விருப்பப்படி குறிப்பிட்ட உதவி வழங்கப்படுகிறது. தாயகம் திரும்பி வந்தபின், இவர்கள் மாற்று உதவிக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் விண்ணப்பித்துக் கொண்டால் அவர்களது வேண்டுகோளும், பரிசீலனை செய்யப்பட்டு மாற்று உதவிகள் மாநில மறுவாழ்வுத்துறை இயக்குநராலும், சென்னையிலுள்ள மத்திய மறுவாழ்வுத்துறை இயக்குநராலும் வழங்கப்படுகின்றன. ஆகவே, தற்போது தாயகம் திரும்பி வருபவர்கட்கு, மறுவாழ்வு திட்டத்தின்கீழ் கடன் வசதி, வேலை வாய்ப்பு முதலிய உதவிகள் அவரவர்களது விருப்பத்திற்கிணங்கத்தான் வழங்கப்படுகிறது.

திரு. க. அரங்கசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொன்னபோது அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப அவர்களுக்கு வேலைவாய்ப்பும் கடன் வசதிகளும் செய்து தரப்படுகின்றன என்று சொன்னார்கள். ஆனால் நீலகிரி மாவட்டத்திலே இருக்கிற தாயகம் திரும்பிய அகதிகள் எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்க்கிறபோது எல்லாம் அதிகாரிகள் அவர்கள் விருப்பத்திற்கு தக்கபடி—என்ன தான் குடும்பக் கார்டுகளைக் கொடுத்து வேலைவாய்ப்பும் கடனும் கேட்டால்கூட—நடக்காமல் அதிகாரிகள் தங்களுடைய விருப்பப்படி நடக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே, இதுபோன்ற குறைபாடுகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் சொல்லியும் இதுநாள் வரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதுபற்றி அறிவிக்க இயலுமா ?

1979 பிப்ரவரி 13]

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தமிழர்கள் தாயகம் திரும்புகிறபோது குறிப்பாக ஸ்ரீலங்காவிலிருந்து வருகிறவர்கள் கண்டியிலே இருக்கிறவர்களைக் கேட்டு, அவர்களுடைய விருப்பத்தின் அடிப்படையிலே தான் இங்கே அனுப்பப்படுகிறார்கள். இங்கே வந்தபிறகு அவர்களுக்கு எத்தகைய உதவிகள் வேண்டுமென்றாலும் அவைகள் பரிசீலிக்கப்பட்டு கூடியவரையில் அப்படிப்பட்ட உதவிகள் அளிக்கப்படுகின்றன எனபதைத தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : இதுவரையில் தாயகம் திரும்பிய அகதிகளில் எத்தனை பேர்களுக்கு இத்தகைய வேலை வாய்ப்பும் கடன்களும் அளிக்கப்பட்டு இருக்கின்றன ? அதிலே மத்திய அரசு எவ்வளவு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

(முற்பகல் 10–10)

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : முழுக்க முழுக்க மத்திய அரசின் உதவியினால் தான் கடன் வசதிகள் அளிக்கப்படுகின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஸ்ரீலங்கா அகதிகளைப் பொறுத்தவரையில் இதுவரையில் 74,832 குடும்பங்கள் தாயகம் திரும்பி வந்திருக்கிறார்கள். அவர்களில் 49,562 குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டிருக்கிறது. தேயிலைத் தோட்டத்தின் மூலமாக 1,696 குடும்பங்களும், சின்கோனா தோட்டத்தின் மூலமாக 125 குடும்பங்களும், இரப்பர் தோட்டத்தின் மூலமாக 223 குடும்பங்களும், நூற்பு ஆலைகள் மூலமாக 1,735 குடும்பங்களும், நிலக்குடியிருப்புத் திட்டமும் விவசாயத் திட்டமும் என்ற திட்டத்தின் மூலமாக 2,161 குடும்பங்களும், அகதிகள் வங்கியில் தொழிற் திட்டத்தின் மூலமாக 2,388 குடும்பங்களும் வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலமாக 2,920 குடும்பங்களும், வியாபாரக் கடன் மூலமாக 34,816 குடும்பங்களும், மாநிலப் பண்ணைகள் கழகத்தின் மூலமாக 879 குடும்பங்களும், இதர மாநிலங்களில் குடியமர்த்தப்பட்டவர்களாக 2,619 குடும்பங்களும், ஆக மொத்தம் 49,562 குடும்பங்கள் மறுவாழ்வு பெற்றிருக்கின்றன. இலங்கைத் தமிழர்கள் வியாபாரக் கடனுக்காக 773·67 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது.

பர்மாவிலிருந்து இதுவரை 1,44,183 நபர்கள் தமிழ் நாட்டிற்கு வந்துள்ளார்கள். இவர்களில் 45,999 குடும்பங்களுக்கு மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்டபடி மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. வியாபாரக் கடன் மூலமாக 41,864 குடும்பங்களும், நிலக்குடியிருப்புத் திட்டமும், விவசாயத் திட்டமும் எனற திட்டத்தின் மூலம் 375 குடும்பங்களும், நூற்பாலைகள் மூலமாக 108 குடும்பங்களும், வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக 3,652 குடும்பங்களும், ஆக மொத்தம் 45,999 குடும்பங்கள் மறுவாழ்வு பெற்றிருக்கின்றன. பர்மா தமிழர்களுக்காக வியாபாரக் கடனுக்காகச் செலவு செய்யப்பட்ட தொகை 547·52 இலட்சம் ரூபாய் ஆகும்.

இதுவரை வியட்நாம் அகதிகள் 426 குடும்பங்கள் தமிழ் நாட்டிற்கு வந்துள்ளனர். இவர்களில் அநேக நபர்கள் வியாபார வர்க்கத்தினர்களாக உள்ளதால், 248 குடும்பங்களுக்கு 5·75 இலட்சம் ரூபாய் வியாபாரக்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்கள் விளக்கமாகவும், விரிவாகவும் பதில் தந்திருக்கிறார்கள், ஆகவே அடுத்த கேள்வியை எடுத்துக் கொள்ளலாம். வினா எண். 39.

நெசவாளர் சேமிப்புத் திட்டம்.

*வினா எண் 39—திரு. சு. பழனிசாமி: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் கூட்டுறவு சங்கங்களிலுள்ள நெசவாளர்கள் எத்தனை பேர் இதுவரை பயன் பெற்றுள்ளார்கள்.

(ஆ) இதற்கு மாற்றுத் திட்டம் ஏதும் உண்டா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜகதீசன் : (அ) நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் 614 கூட்டுறவு சங்கங்களில் 59,000 நெசவாளர்கள் சேர்ந்து பயன் பெற்று வருகின்றனர்.

(இ) இத்திட்டத்தை நெசவாளர்களுக்கு மேலும் அதிக பயனளிக்கும் வகையில் மாற்றங்கள் செய்வது பற்றி பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. பழனிசாமி: தலைவரவர்களே, மாற்று திட்டம் உண்டு என்று அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தில் நெசவாளர்கள் மாதம் ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் செலுத்தினால் அவர்கள் இறக்கும் தறுவாயில் 5,000 ரூபாய் கொடுக்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜகதீசன் : தலைவரவர்களே, அரசு உதவித் தொகையாக ஒரு ரூபாய்க்கு 3 பைசா வீதம் அளித்தால் ஆண்டு ஒன்றுக்கு இப்பொழுது 30 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆனல் மாற்றுத் திட்டத்தின் அடிப்படையில், மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் செலுத்தும் நெசவாளர்கள் இறந்துவிட நேரிட்டால், அவரது நியமனதாரருக்கோ அல்லது சட்டப்படியான வழிமுறையினருக்கோ ரூபாய் 3000 கொடுக்கலாம் என்ற ஒரு திட்டத்தை இப்பொழுது அரசு பரிசீலனை செய்து வருகிறது.